**D.V.C. 22 of 2024** **Previous Date : 19.09.2025**

**PW1**

**மணிமேகலை க/பெ.கருப்புசாமி**

**14.11.2025**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 14.11.2025.**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.com படித்துள்ளேன். 24.02.2023 முதல் நவம்பர் 2023 வரை நான் என் கணவர் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி 9 மாதத்தில் அதிகபட்சமாக 50 முதல் 100 நாட்கள் வரை என் கணவருடன் இருந்திருப்பேன் என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரர் தமிழ்செல்வி என்பவர் 20 வருடங்களுக்கு முன்பு திருமணம் முடித்து என் கணவர் வீட்டில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள ஊரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 5வது எதிர்மனுதாரர் சகுந்தலா மற்றும் 6வது எதிர்மனுதாரர் சந்திரசேகரன் ஆகியோர் குடியிருக்கும் வீட்டிற்கும், என் கணவர் வீட்டிற்கும் 5 கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். சகுந்தலா மற்றும் தமிழ்செல்வி ஆகியோர் விசேசத்திற்கு என் மாமியார் வீட்டிற்கு வந்து செல்வார்கள் என்றால் சரிதான், சகுந்தலா அடிக்கடி வந்து செல்வார். சந்திரசேகரன் ஆசிரியராக வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கும், என் கணவருக்கும் சின்ன சின்ன மனஸ்தாபங்கள் ஏற்பட்டால் சந்திரசேகரன் அறிவுரை சொல்வார் என்றால் சரிதான். ஒரு முறை அரலி விதையை அரைத்து குடித்துவிட்டதாக நான் மடத்துகுளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி மடத்துகுளம் சிகிச்சை விபத்தை முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் என் கணவரை மிரட்டுவதற்காக அவ்வாறு நடந்து கொண்டேன் என்றாலும் நான் அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மருத்துவ சிகிச்சை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாமல் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவம் சம்மந்தமாக குமாரலிங்கம் காவல் நிலையத்தில் நான் ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் பொய் புகார் என்பதால் குமாரலிங்கம் காவல் நிலையத்தார் என்னை பழனி மகளிர் காவல் நிலையம் அனுப்பி விட்டார்கள் என்றால் சரியல்ல, மகளிர் பிரச்சனை

என்பதால் மகளிர் காவல் நிலையம் போக சொன்னார்கள்.

2. பழனி அனைத்து மகளிர் காவல் நிலைய புகார் விசாரணையில் இரண்டுபேருக்கும் அறிவுரை சொல்லி பழனி குறிஞ்சி நகரில் தனி வீடு பார்த்து இருக்க சொல்லி அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். பழனி குறிஞ்சி நகரில் எவ்வளவு நாள் குடும்பம் நடத்தினோம் என்றால் மூன்று மாதங்கள். குறிஞ்சி நகரில் குடியிருந்த சமயத்தில் நானும், என் கணவரும் ஐஸ்வர்யா கருதரித்தல் மையத்தில் பரிசோதனை மேற்கொண்டோம் என்றால் சரிதான். அதற்கு முன்பு அன்பு மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொண்டோம் என்றால் சரிதான். இரண்டு மருத்துவமனை பரிசோதனை முடிவில் தந்த மாத்திரைகளை நான் சரியாக சாப்பிடவில்லை என்றால் சரியல்ல, எனக்கு பிரச்சனை இல்லை என் கணவருக்கு மறுபடியும் பரிசோதனை செய்ய சொன்னார்கள், அவர் செய்யவில்லை, மருத்துவ ஆவணத்தை எடுத்து சென்றுவிட்டார். நான் தான் மருத்துவ ஆலோசனை படி நடந்து கொள்ளவில்லை என்பதால் தான் மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது உண்மையாக இருந்தால் அன்பு மருத்துவமனை, ஐஸ்வர்யா மருத்துவமனை ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்பதால் தற்போது தாக்கல் செய்யாமல் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து மற்றும் கடப்பாடு பிரமாண வாக்குமூலம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் பழனி ஆண்டவர் ஸ்டீல் கம்பெனியில் மேனஜராக வேலை செய்கிறார். எனது கணவருக்கு எவ்வளவு சம்பளம் என்றால் என்னை திருமணம் செய்யும்போது மாதம் ரூபாய் 35000/– என்று சொன்னார். பழனி ஆண்டவர் ஸ்டீல் கம்பெனி அல்ல என்றாலும், இரும்பு கடை என்றாலும் சரிதான், இரும்பு கம்பி, சிமெண்ட், சீட் விற்கும் கடை. எனது கணவர் எவ்வளவு நாட்களாக அந்த கடையில் வேலை செய்கிறார் என்றால் எனது திருமணத்திற்கு 5 வருடத்திற்கு முன்பிருந்து வேலை செய்து வருகிறார். எனது கணவர் பழனி ஆண்டவர் ஸ்டீல் கம்பெனியில் தினக்கூலியாக ரூபாய் 500/– சம்பளத்திற்கு வேலை செய்கிறார் என்றால் சரியல்ல. பெரியசாமி மற்றும் வஞ்சம்மாள் வீட்டில் இருந்து விவசாயம் செய்கிறார் என்றால் ஆமாம், தோட்டத்தை கவனித்து கொண்டிருக்கிறார்கள். எனது கணவர் கருப்புசாமி எத்தனை மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு வருவார் என்றால் காலை 9.00 மணிக்கு சென்றுவிட்டு இரவு 8.00

மணிக்கு வருவார்.

3. பகல் நேரத்தில் நான் வெளி நபரிடம் அதிக நேரம் பேசியதை எனது மாமனார், மாமியார் கண்டித்ததால் விரோதம் கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எனது போன் பரிசோதனைக்கு ஒப்படைக்க தயாராக உள்ளேன். நான் மனுவில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், குடும்ப வன்முறையும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. குடும்ப வன்முறை நடந்திருந்தால் அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 6ம் எதிர்மனுதாரருக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் அவர் ஆசிரியராக வேலை செய்வதால் அவரை சேர்த்தால் தான் மிரட்டி பணம் பறிக்க முடியும் என்று இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல, அவரும் அவர் மனைவியும் தான் முக்கியமான நபர்கள். திருமணம் முதல் 1ம் எதிர்மனுதாரர் பொறுப்பான கணவராக நடந்து கொண்டார் என்றாலும் நான் தான் அன்பான பொறுப்பான மனைவியாக நடந்து கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. இனிமேல் சேர்ந்து வாழ வாய்ப்பு இல்லை என்பதால் என் கணவர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து பழனி மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் நான் சேர்ந்து வாழ தயாராக தான் இருக்கிறேன், வழக்கு நிலுவையில் உள்ளது. நான் மனதளவில் சேர்ந்து வாழ தயாராக இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பலமுறை நானும், 1ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ அவர் எடுத்த முயற்சி வீணாக போனதால் விவாகரத்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, நான் தான் முயற்சி செய்தேன். உண்மையில் நான் சேர்ந்து வாழ விரும்பிருந்தால் நான் எனது கணவருடன் சமாதானமாக சென்று வாழ்ந்திருப்பேன் என்றால் சரியல்ல, நான் தயாராக தான் இருக்கிறேன் என் கணவர் தான் சமாதானத்திற்கு வரவில்லை. நான் மனுவிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளதுபோல் எதிர்மனுதாரர்கள் எந்த குடும்ப வன்முறையும் செய்யவில்லை என்றாலும், அவர்களை அலகளித்து கஸ்டபடுத்த வேண்டும் என்று இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.11.14 18:16:15 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.